# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:29** **தேதி:11.03.2015**

## கோவை தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே !

11-03-2015 அன்று கோவை சரோஜ் சௌத்ரி அரங்கத்தில் ( AIIEA சங்க அலுவலகத்தில் ) BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. அகில இந்திய உதவிப்பொதுச்செயலரும், தமிழ் மாநில தலைவருமான தோழர் .எஸ் செல்லப்பா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்.T.பிரேமா CVP மற்றும் தோழர். இந்திரா ACS ஆகியோரைத் தவிர மற்ற 19 நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். தோழர் C. செல்வின் சத்யராஜ்COS, அஞ்சலி உரை நிகழ்த்த, தோழர் V.வெங்கட்ராமன் CVP அனைவரையும் வரவேற்றார். மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் முன் வைத்த ஆய்படு பொருளின் மீது அனைத்து தோழர்களும் ஒரு சிறப்பான விவாதத்தை நடத்திய பின் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக எடுக்கப்பட்டன.

ஒரிரு தினங்களுக்குள் மாநில நிர்வாகிகள் கூட்டத்தை சிறப்பாக நடத்திய கோவை மாவட்ட சங்கத்தை அனைத்து தோழர்களும் பாரட்டினர்.

1) ஜனவரி 30 ம் தேதி நடைபெற்ற மாநிலந்தழுவிய கருத்தரங்கத்தை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த கடலூர் மாவட்ட FORUM தோழர்களுக்கு மாநில நிர்வாகிகள் கூட்டம் பாராட்டுதல்களை தெரிவித்தது. அந்த கூட்டத்தில் தமிழகம் முழுவதும் அலைஅலையாய் திரண்டு கலந்து கொண்ட தோழர்களுக்கும், அதற்கு ஏற்பாடு செய்த மாவட்ட / மாநில சங்க நிர்வாகிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டது. மேலும் அந்தக்கூட்டத்தில் மிகச்சிறப்பான உரை நிகழ்த்திய தோழர்.P.அபிமன்யூ GS BSNLEU, தோழர் C.C.சிங் GS NFTE, தோழர் K.செபாஸ்டியன், GS SNEA, தோழர் வேணுகோபால் AIBSNLEA தலைவர் ஆகியோருக்கும் நன்றியை உரித்தாக்கிறது

2) டெல்லி பேரணியில் தமிழ்மாநில BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக கலந்து கொண்ட 124 தோழர்களுக்கும் மாநில நிர்வாகிகள் கூட்டம் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது

3) தமிழகத்தில் நடைபெற்ற கையெழுத்து இயக்கத்தில் இதுவரை 4,35,272 கையெழுத்துக்களை பெற்ற அனைத்து தோழர்களையும் மாநில நிர்வாகிகள் கூட்டம் பாராட்டுகிறது. குறிப்பாக 64, 000 கையெழுத்துக்களை பெற்ற சேலம் மாவட்ட சங்கத்தினை வெகுவான பாராட்டுக்களை உரித்தாக்குகிறது

## முடிவுகள்

1) மார்ச் 16க்குள் அனைத்து மாவட்ட சங்கங்களிலும் மாவட்டச் செயற்குழு/ மாவட்ட நிர்வாகிகள் கூட்டங்களை நடத்தி கையெழுத்து இயக்கத்தினை திட்டமிட்டு மார்ச் 28க்குள் கீழே குறிப்பிட்டுள்ள இலக்கினை பூர்த்தி செய்து மாநில சங்கத்திற்கு அனுப்ப வேண்டும் . மாவட்டங்களுக்கு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள மாநில சங்க நிர்வாகிகள் இதற்கு மாவட்டங்களுக்கு வழிகாட்டி செயல்பட வேண்டும்.

| வரிசை எண் | மாவட்டம் | புதிய இலக்கு | பொறுப்பான மாநில நிர்வாகிகள் |
|---|---|---|---|
| 1 | குன்னூர் | 20,000 | V.வெங்கட்ராமன் |
| 2 | கோவை | 60,000 | K.மாரிமுத்து, S.சுப்ரமணியன் |
| 3 | ஈரோடு | 40,000 | V.மணியன், A.முகமது ஜாபர் |
| 4 | சேலம் | 36,000 | S.தமிழ்மணி |
| 5 | தர்மபுரி | 30,000 | M.பாபு |
| 6 | கடலூர் | 30,000 | A.அண்ணாமலை |
| 7 | வேலூர் | 20,000 | A.பாபு ராதாகிருஷ்ணன் |
| 8 | பாண்டிச்சேரி | 10,000 | K.சீனிவாசன் |
| 9 | மதுரை | 50,000 | D.ஜான் போர்ஜியா, P.சந்திரசேகர் |
| 10 | விருதுநகர் | 30,000 | M.முருகையா |
| 11 | தூத்துக்குடி | 30,000 | R.M.கிறிஸ்டோபர் |
| 12 | நெல்லை | 30,000 | C.சுவாமி குருநாதன் |
| 13 | நாகர்கோவில் | 30,000 | P.இந்திரா |
| 14 | திருச்சி | 50,000 | M.மல்லிகா |
| 15 | தஞ்சை | 10,000 | R.மகேந்திரன் |
| 16 | கும்பகோணம் | 10,000 | R.மகேந்திரன் |
| 17 | காரைக்குடி | 10,000 | C.செல்வின் சத்யராஜ் |
| 18 | சென்னை | 10,000 | S.செல்லப்பா, T.பிரேமா |

2) ஏப்ரல் 10 ம்தேதிக்குள் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட மட்ட கருத்தரங்கங்கள்/ சிறப்புக்கூட்டங்கள் ஆகியவற்றை நடத்த வேண்டும்

3) மாநில FORUM சார்பாக ஒரு நோட்டீஸ் வெளியிடுவது

4) ஏபரல் 11 முதல் 20 ம் தேதி வரை அனைத்து கிளைகளிலும் பொதுக்குழுக் கூட்டங்களை நடத்துவது. அலுவலகங்கள்/தொலைபேசி நிலையங்களில் சுற்றுப்பயணம் செய்து தேவைப்படும் இடங்களில் தோழர்களை நேரில் சந்திப்பது ஆகியவை நடத்தப்பட வேண்டும்

5) ஏப்ரல் 21 & 22 தேதிகளில் நடைபெற உள்ள வேலைநிறுத்தத்தை மிக பிரமாண்டமான வெற்றியான வேலை நிறுத்தமாக நடத்துவது.

6) TNTCWU சங்கத்தின் ஆண்டு சந்தா சேகரிப்பு இயக்கத்திற்கு BSNLEU மாவட்ட சங்கங்கள் உதவிசெய்து அதனை மார்ச் 25ம் தேதிக்குள் நிறைவு செய்ய ஒத்துழைக்க வேண்டும்

7) மாநிலக்கவுன்சில AGENDA க்களை மார்ச் 17க்குள மாநில சங்கத்திற்கு அனுப்பி வைப்பது

8) BSNL ஊழியர்சங்க அமைப்பு தினமான 2015 மார் 22ம் தேதியை " BSNL பாதுகாப்பு தின"மாக கடைபிடிப்பது. அனறைய தினம் வேன் பிரச்சாரம்\தெருமுனைக் கூட்டங்கள் என நடத்தி பொதுமக்களிடம் BSNL ஐ பாதுகாக்க வேண்டியதின் அவசியம் பற்றியும், நமது கையெழுத்து இயக்கம் தொடர்பாகவும் விரிவாக பேச வேண்டும் . மேலும் வழக்கமான சமூக பணிகளையும் சிறப்பாக திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இறுதியில் தோழர் S.சுப்ரமணியன் ACS நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

மாநில நிர்வாகிகள் கூட்டத்தின் முடிவுகளை மிகச்சிறப்பாக அமுல்படுத்தும்படி அனைவரையும் தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்

வாழ்த்துக்களுடன்

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**